வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சிறுதெய்வ வழிபாட்டில் ஆண் தெய்வம்

**ப. பவித்ரா**
**இரண்டாமாண்டுஇளங்கலைத்தமிழ்**
**ஏ. டி. எம். மகளிர்கல்லூரி, நாகப்பட்டினம்**
Pthra0623@gmail.com

முன்னுரை:

சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமங்களைச் சார்ந்த மக்களின் வாழ்வியல் நடைமுறைகளை பிரதிபலிக்கும் பண்பாட்டு கூறாகும். இயற்கையோடு இணைத்து தொடங்கிய மனித வாழ்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்திருப்பதை போலவே இந்த சிறுதெய்வ வழிபாடு பிரிக்க முடியாத ஒரு நிலையை அடைந்திருக்கிறது.

சங்ககாலத்தில் சிறுதெய்வ வழிபாடு:

சங்கத் தமிழர்கள் சிறுதெய்வங்களை வழிபட்டனர். சிறுதெய்வ வழிபாடு என்பது நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடும் முறையாகும். மேலும் இவற்றில் வீட்டுத் தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனத் தெய்வ வழிபாடு போன்றவை அடங்கும்.

சிறுதெய்வ வழிபாட்டின் சிறப்புகள்:

- மனிதன் தவறு செய்யும் போது அவனது மனதை அச்சுறுத்தி நல்வழிப்படுத்தும் உந்து சக்தியாக சிறுதெய்வ வழிபாடு இருக்கிறது.
- மனித வாழ்வில் நடைபெறும் அனைத்து இன்ப, துன்பங்களுக்கும் தெய்வமே காரணம் என்ற நம்பிக்கை இருக்கிறது.
- மனிதனின் வரலாற்றில் மலையுறை தெய்வம், காடுறை கடவுள், காவலிலும் மரங்களிலும் வாழும் தெய்வம், நீர்த்துறைத் தெய்வம் முதலியன சிறுதெய்வங்களாக இருந்தன.

தெய்வம் தோன்றிய முறை:

முதலில் மனிதன் நெருப்பு, இடி, மின்னல், மழை போன்ற இயற்கை சூழலுக்கு பயந்தனர். பின்பு விலங்கு முதலிய உயிர்களுக்கு அஞ்சினார். எதிர்காலத்தில் கடவுளுக்கு பயப்பட தொடங்கினார். பின்பு அவற்றையே ஒரு உருவ சிலையாக வடிவமைத்தான். இன்று வரை எந்த காலத்திலும் இவ்வுலகத்தில் எந்த கடவுளும் தானாகவே தோன்றிய உவரும் இல்லை. ஒரு மனிதன் மற்றொரு கடவுளை வடிவமைக்கின்றான்.

சிறுதெய்வ வழிபாடு:

சிறுதெய்வ வழிபாடு என்பது இகற்கை வணக்கத்தில் இருந்தே தோன்றி இருக்க வேண்டும். இயற்கை வழாபாடடே காலப்போக்கில் சிறுதெய்வ வழிபாடு என்று சங்கப்பாடல் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டினை பெருந்தெய்வம் என்றே குறிப்பு உள்ளது. இடைக்காலத்தில் வந்த பக்தி இலக்கியத்தில் "சிறுதெய்வம்" என்ற சொல் இடம் பெற்றுள்ளது. சிறுதெய்வ வழிபாடு குறித்து,

"இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம்
அல்லோம்"

(திருநாவுக்கரசர், தேவாரம் மறுபிற்றத் திருத்தாண்டகம்,ப.5) 1

தேவாரப்பாடலில் திருநாவுக்கரசர் சிறுதெய்த்தினைக் கூறுகிறார்.

இதே கருத்தினை இராமலிங்க அடிகள்,

"நலிவுற்ற சிறுதெய்வம்"

(இராமலிங்கர், திருவருட்பா பிள்ளை சிறு விண்ணப்பம் ப. 59) 2

என விளக்கம் தந்துள்ளார்.

சங்க இலக்கியத்தில் சிறுதெய்வ வழிபாடு:

சங்க இலக்கியங்களில் சிறுதெய்வம் என்ற சொல் காணப்படவில்லை. பெருந் தெய்வம் என்ற சொல்லேக் காணமுடிகிறது. பெருந்தெய்வத்தினை,

"வொருவரும் கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல"

(அகம்.360: 6-7) 3

என்று அகநானூறு விளக்கம் அளிக்கின்றது.

இதே போன்று பெருந்தெய்வம் என்ற சொல்லினை . குறுந்தொகை 263: (3-4), 4 புறம் 58: 10, 5 . திருமுருகாற்றுப்படை அடி 160 , 6 இவற்றுள் வந்துள்ளது. தெய்வம் என்று குறிப்பிடாமல் இது சிறுதெய்வம் என்று பொருள் கொள்வதாகும்.

சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்:

சிறுதெய்வங்கள் என்பது மக்களின் தங்களது விருப்பமான வழிபாட்டிற்காக உருவாக்கியது ஆகும். சிறுதெய்வம் என்பது நமது முன்னோர்களின் வழிபாடாக ஏற்றுக் கொள்ளலாம்.

பண்டையக்கால மனிதன் சிந்திக்கத் தொடங்கிய போது அவன் மனதில் விடையேறாத கேள்விகளுக்கு பதில் காணும் வகையில் தெய்வ வழிபாட்டினை உருவாக்கினான் என்பது அறிய முடிகிறது. குலதெய்வ வழிபாட்டினை வைத்து தான் அவர் எங்கிருந்து வந்தவர் அவரின் பூர்விகம் என்ன என்பதை அறிய முடிகிறது.

"வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்வில் இருந்தும் குற்ற உணர்வில் இருந்தும் உண்டாகி இருப்பதாகக் கூறப்படுகிறது"(தொ.1.ப.451) 7

ஆண் தெய்வ வழிபாடு:

நாட்டுப்புற சிறுதெய்வங்களில் பெண் தெய்வங்களை நோக்க ஆண் தெய்வங்கள் குறைவு என்றுதான் கூறவேண்டும். பெண் தெய்வங்கள் பல்வேறு சக்திகளைத் தங்கள் வசம் வைத்திருப்பதாகவும் ஆண் தெய்வங்கள் குறைந்த சக்தி உடையவையாகவும் நம்பப்படுவதே இதற்குக் காரணம் எனலாம்.

"சக்தி இருந்தா வேலையைச் செய் இல்லையென்றால் சிவனேன்னு கிட" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். இது பெண் தெய்வங்களைச் சிறப்பிக்கவே உருவாக்கப்பட்டதாகும்.

ஆண் தெய்வங்கள் சில முதன்மைத் தெய்வங்களாகவும் பல முதன்மைத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களாகவும் விளங்குகின்றன. துணைமைத் தெய்வங்களைப் "பரிகாரம் தெய்வங்கள்" என்றும் கூறுவதுண்டு.

ஆண் தெய்வங்கள்:

முதன்மைத் தெய்வங்கள்:

- அய்யனார்
- சுடலை மாடன்
- அண்ணன்மார் சாமி
- மதுரை வீரன்
- கருப்பசாமி
- முனீஸ்வரன்

துணைமைத் தெய்வங்கள்:

- முத்தையா சாமி
- அக்னி வீரன்
- இலாட சன்னாசி
- இருப்பினும் சாமி
- ஒண்டி வீரன்
- மாயாண்டி
- மாட சாமி

தரும முனியாண்டியின் வரலாறு:

இவ்வாறு முதன்மைத் தெய்வமாக கருதப்படும் தெய்வம் ஒரு ஊரின் காவல் தெய்வமாகவே கருதப்படுகிறது. இவற்றை ஊர் தெய்வமாகவோ, காவல் தெய்வமாகவே விளக்கப்படுகிறது. மேலும் இவ்வாறு கருதப்படும் தெய்வங்கள் பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலே அமைந்துள்ளன.

இவற்றுள் நாகப்பட்டினத்தில் நடுகல் தீர்த்த விநாயகர் ஆலயத்தில் தென்பக்கத்தில் அருகாமையில் அமைந்திருக்க கூடிய முனியாண்டி கோவிலில் முதலில் ஒரு இரும்பு அரிவாள் வைத்து வழிபட்டு வந்தனர். பின்பு இந்த கோவிலுக்கு தினந்தோறும் செல்லக்கூடிய ஒருவரின் கனவில் கடவுள் வந்து எனக்கு இந்த இடத்தில் ஒரு சிலையை வடிவமைத்து வழிபட வேண்டும்

என்று இறைவன் கூறியதாக நம்பப்படுகிறது. பின்பு அந்த இடத்தில் சிலையை வடிவமைத்து வழிபட்டு வருகின்றனர். மேலும் இன்றைய அளவிலும் வழிபட்டு வருகின்றனர்.

உணவு முறை:

உணவு முறை என்பது பொதுவாகவே காட்டுப்பகுதியில் இருக்கக்கூடிய தெய்வகளுக்கு அசைவம் சமைத்து கிடாவெட்டி படையலிடுவார்கள். அதைப்போலவே அசைவ உணவுகளை சமைத்து படையலிட்டு அந்த கோவிலுக்கு வருகைத்தரும் பக்தர்களுக்கு வழங்குவார்கள்.

திருவிழாக் காலங்கள்:

தாய்தெய்வ வழிபாடு போலவே ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளில் இக்கோயிலில் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். ஒருவர் மீது சாமி அருள் வந்து அரிவாள் மேல் ஏறி நின்று ஒருவர் குறி சொல்லத் அந்த கோவிலின் சிறப்பாக கருதப்படுகிறது.

இந்த திருவிழாக் காலத்தில் பக்தர்கள் கரகம், அலகுகாவடி, அக்னிக்கப்பரை, கிடாவெட்டி மற்றும் சுவாமிகளுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்படுவது வழக்கமாகும்.

முன்னோர் வழிபாடு:

சங்ககாலத்தில் போர்க்களத்தில் உயிர் துறந்த வீரனின் உடம்பை புதைத்து அந்த இடத்தில் நடுக்கல் அமைத்து அவற்றில் அந்த வீரனின் பெயரையும் பெருமையும் எழுதி நடுதல் மரபாகும். இதனை நடுக்கல் வீரக்கல் என்று கூறுவர். உயிரிழந்த வீரனின் நினைவு கல்லில் சங்க கால மக்கள் மிகவும் சிறப்பிற்குரிய மயில் தோகையை சுட்டையும் ஆடுகளை பலியிட்டும் வணங்கி வந்தனர். சிறுதெய்வ வழிபாடுகள் முன்னோர் வழிபாட்டின் வளர்ச்சி நிலையே என்று உறுதியாகக் கூறலாம். சீனா, எகிப்து, உரோம் போன்ற நாடுகளில் முன்னோர் வழிபாடு இருப்பதை அறிய முடிகிறது.

வழிபாட்டின் இன்றைய நிலை:

மக்கள் நாள்தோறும் படிக்கின்ற பழக்கம் உள்ளவர்களாக இருப்பதால் இதழ்களின் வாயிலாக ஆன்மீக கருத்துக்கள் பரப்பப்பட்டு இருக்கின்றன. அவற்றை கண்டு மக்கள் பயன் பெறுகின்றனர். போலீச்சாமியார்கள் இறைவனின் பெயரைச்சொல்லி ஏமாற்ற நினைப்பவர்கள் இவர்களை எல்லாம் அடியோடு ஒழிக்க வேண்டும். இவற்றுக்கு முறையான ஆன்மீக எழுத்தாளர்கள் உருவாக வேண்டும்.

முடிவுரை:

பண்டைக் காலத்தில் தமிழர்களிடம் கடவுள் நம்பிக்கை மிகுந்து காணப்பட்டது. தங்களுக்கு ஏற்பட்ட நோய்களை நீக்குவதற்காக கடவுளிடம் வேண்டினர். மலர்களையும் நறுமணப் பொருள்களையும் கொண்டு மக்கள் கடவுளை வழிபட்டனர். இதனை,

“ பரவியும்,பொழுதும் வரவு மலர்தூவியும்
வேறுபல் உருவின் கடவுள் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி” 8

(குறிஞ்சிப்பாட்டு 5-8)

என்று கபிலர் குறிப்பிடுகிறார்

மேற்கோள்கள்:

1. திருநாவுக்கரசர், தேவாரம் மறுபிற்றத் திருத்தாண்டகம், ப. 5.
2. இராமலிங்கர், திருவருட்பா பிள்ளை சிறு வண்ணப்படம் ப. 59.
3. அகநானூறு, 360: 6-7.
4. குறுந்தொகை 263: (3-4).
5. புறநானூறு 58: 10
6. திருமுருகாற்றுப்படை அடி, 160.
7. தொல்காப்பியம், 1. ப. 451.
8. குறிஞ்சிப்பாட்டு 5-8.

துணை நூற்பட்டியல்:


1. தமிழர் வழிபாட்டில் ஆண், பெண் தெய்வங்கள்- திருமதி . இர. கஸ்தூரி
2. தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள் – முனைவர். ச. கனகவள்ளி, கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், சென்னை.
3. சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் – பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை (தமிழ்ப் பல்கலைக்கழகம் – ஓய்வு) டி. டி. டி. ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600 113.